மக்களுக்கு ஒரு சட்டம் - போலீசுக்கு ஒரு சட்டமா? | சுற்றிலும் வன்முறை: நடுவில் நம் குழந்தைகள்!!

# லாயர்ஸ் லைன்

Rs.25/- Vol: II - Issue: 23 - October: 2013 www.lawyersline.net

ISSN 2321-8770



## உயர்நீதிமன்றத்தில் தமிழ்?
அலுவல் மொழியாக்கப்படுமா?

## சிட்பண்ட் சட்டம்
உயர்நீதிமன்ற தீர்ப்பு...

## சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தேர்தல்...
வேட்பாளர்களின் மனம் திறந்த வாக்குறுதிகள்...!

# உயில்...



R.கிருஷ்ணமூர்த்தி
M.A(police administration). B.L



ஒரு மனிதன் தன் வாழ்நாளில் உழைத்து சம்பாதிக்கும் அசையும் (அ) அசையா சொத்துக்களை தான் உயிருடன் இருக்கும் வரை அனுபவித்துவிட்டு, பிறகு சம்பாதித்த அசையும் (அ) அசையா சொத்துக்களை தான் விரும்பும் நபருக்கோ (அ) கோயில்களுக்கோ (அ) தர்ம ஸ்தாபனங்களுக்கோ (அ) மூன்றாம் நபர்களுக்கோ உயில் மூலம் சொத்துக்களை எழுதி வைக்கலாம்.

**உயில் யார் எழுத வேண்டும்?**

உயில் எழுத வேண்டுமென்றால் பதினெட்டு வயதுக்கும் மேல் இருக்க வேண்டும். தான் சுயமாக (அ) கஷ்டப்பட்டு சம்பாதித்த அசையும் (அ) அசையா சொத்துக்களை (அ) மூதாதையர் மூலம் வந்த சொத்துக்களை அனுபவித்து விட்டு தன் காலத்திற்கு பிறகு இவர்கள் தான் அனுபவிக்க வேண்டும் என எழுதப்படுவது தான் உயில் ஆகும். ஒருவர் தன் சொத்துக்களை தன்னுடைய வாரிசுகளுக்கு உயில் மூலம் எழுதி வைக்கலாம் (அ) வாரிசு இல்லாதவர்கள் தன் வளர்ப்பு பிள்ளைகளுக்கு தான் சம்பாதித்த அசையும் (அ) அசையா சொத்துக்களை எழுதலாம். சொத்துக்கள் சம்பாதித்தவரை யார் நன்றாக பார்த்துக் கொள்கிறார்களோ அவர்கள் மீதும் உயில் எழுதி வைப்பார்கள். யாரும் தான் சம்பாதித்த அசையும் (அ) அசையா சொத்துக்களை தன் காலத்திற்கு பிறகு அனுபவிக்கக் கூடாது என்று நினைப்பவர்கள் (அ) வாரிசு இல்லாதவர்கள் தன் வாழ்நாளில் சம்பாதித்த சொத்துக்களை கோயில்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும் உயில் மூலம் எழுதி வைக்கலாம். இவ்வாறு கோயில்களுக்கு எழுதி வைத்த சொத்துக்கள் தமிழ்நாட்டில் ஏராளம். இந்த சொத்துக்களை கோயில் நிர்வாகம் (அ) அறநிலையத் துறை நிர்வகித்து அந்த சொத்துக்களின் மூலம் வரும் வருமானத்தை வைத்துக்கொண்டு கோயில் பணிகளுக்கும், கோயில்களில் பணியாற்றுபவர்களுக்கும் (அ) அன்னதானம் செய்வதற்கும் இன்னும் பல நல்ல காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.

**உயிலை எப்படி எழுத வேண்டும்?**

உயில் எழுத வேண்டும் என்று நினைப்பவர்கள் வெற்று காகிதத்தில் (அ) துண்டு காகிதத்தில் கூட தன் வாழ்நாளில் சம்பாதித்த அசையும் (அ) அசையா சொத்துக்களை தன்னுடைய வாரிசுகளுக்கோ, தான் விரும்பும் நபருக்கோ, வேறு யாருடைய பெயரிலோ, கோயில்களுக்கோ, தர்ம ஸ்தாபனங்களுக்கோ (அ) தன்னை கடைசி வரை யார் நன்றாக பார்த்துக் கொள்வார் என நினைக்கும்

ஒருவர் உயில் எழுதி வைத்துவிட்டால் மட்டும் போதாது. அதை நீதிமன்றம் முன் சமர்பிக்கப்பட்டு, யாரும் உயிலை ஆட்சேபம் தெரிவிக்காத பட்சத்தில் நீதிமன்றம் சான்றிதழ் வழங்கும் (அ) உயிலை தகுதியானது தான் என்று நீதிமன்றம் உத்தரவு இடும்.

நபரின் மீதோ, தன்னுடைய காலத்திற்கு பிறகு இவர்கள் தான் அனுபவிக்க வேண்டும் என்பதனை தான் எழுதி வைக்கும் உயிலில் தெளிவாக எழுத வேண்டும். அப்பொழுது தான் அந்த சொத்துக்கள் உரிய நபர்களுக்கு முறையாக போய் சேரும். அவ்வாறு எழுதப்படும் உயிலில் இரண்டு சாட்சிகள் கையெழுத்து போடுவது மிகவும் சிறப்பு.

**உயிலை பதிவு செய்ய வேண்டுமா?**

உயிலை கட்டாயம் பதிவு செய்ய வேண்டுமென்று பதிவுத்துறை சட்டம் சொல்லவில்லை, உயிலை பதிவு செய்யலாம் என்று சட்டம் சொல்கிறது. ஒருவர் தான் எழுதும் உயிலை பதிவு செய்வது மிகவும் நல்லது. ஏனென்றால் பலர் உயிலை எழுதி எங்கேயோ வைத்து விட்டு அவர் இறந்துவிட்டால், உயில் இருக்கும் செய்தியே யாருக்கும் தெரிவதில்லை. அவர் இறந்தபிறகு வாரீசு சான்றிதழ் வாங்கி அதன் அடிப்படையில் சொத்துக்களை பிரித்துக் கொண்டு பிரச்சினைகள் இல்லாமல் வாழ்ந்து வருவார்கள். இதன் அடிப்படையில் வாரீசுதாரர்களுக்கு வருவாய் துறையும் பட்டா, சிட்டா, அடங்கள் முதலியவற்றை முறையாக வழங்கிவிடுவார்கள். வாரீசுதாரர்களில் யாராவது ஒருவருக்கோ (அ) பலருக்கோ, தனியாகவோ (அ) கூட்டாகவோ சேர்த்து ஏதோ கஷ்டத்திற்காக சொத்துக்களை விற்கும் நிலை ஏற்பட்டு மூன்றாவது நபருக்கு விற்று விடுவார்கள். மூன்றாவது நபரும் எல்லா ஆவணங்களையும் சரிபார்த்து தான் வாங்கி இருப்பார். இறந்தவர் வாரீசுதாரர்களில் யாருக்காவது ஒருவருக்கு உயில் எழுதி வைத்திருந்தால் அந்த உயிலின் மூலம் பல பிரச்சினைகள் வரும்.

இதையெல்லாம் தவிர்ப்பதற்கு தன்னுடைய சொத்துக்கள் எந்த சார் பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்டு இருக்கின்றதோ அந்த சார்பதிவாளர் அலுவலகத்தில், தான் எழுதும் உயிலை பதிவு செய்தால் வில்லங்கம் ஏதாவது இருக்கின்றதா என்று வில்லங்க சான்றிதழ் போடும் போது இந்த உயில் பதிவு செய்யப்பட்டிருப்பதும் தெரியவரும். இதனால் பல முறைகேடுகளை தவிர்க்கலாம். எனவே உயிலை பதிவு செய்வது என்பது மிகவும் நல்லது.

**உயிலை மூல மெய்ப்பிதழ்** (Probate of will)

ஒருவர் உயில் எழுதி வைத்துவிட்டால் மட்டும் போதாது, அதை நீதிமன்றம் முன் சமர்பிக்கப்பட்டு, யாரும் உயிலை ஆட்சேபம் தெரிவிக்காத பட்சத்தில் நீதிமன்றம் சான்றிதழ் வழங்கும் (அ) உயிலை தகுதியானது தான் என்று நீதிமன்றம் உத்தரவு இடும். இவ்வாறு உயிலை (Probate) செய்வதற்கு மாவட்ட நீதிமன்றத்தையோ (அ) உயர் நீதிமன்றத்தையோ அணுகி Probate சான்றிதழ் பெற வேண்டும்.

இவ்வாறு செய்த பிறகு தான் அந்த உயில் முழுமையானதாக கருதப்படும். உயிலின் மூலம் பெறப்படும் சொத்துக்களை அனுபவிக்கவோ (அ) விற்கவோ செய்ய முடியும். ஒருவர் எத்தனை உயில்கள் வேண்டுமானாலும் எழுதலாம். கடைசியாக அதாவது இறப்பதற்கு முன்னால் எழுதப்படும் உயில் மட்டும் தான் செல்லுபடியாகும். மற்றவைகள் அனைத்தும் செல்லுபடியாகாது. ■

